அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இருந்தாலும் கூட, அரசு மூலமாக கடனைப் பெற்று தொழில் நடத்தக்கூடியவா களுக்கு ஊக்கம தாவேண்டும் என்பதற்காக, அந்த பெல் நிறுவனத்தை நாம் கேட்டுக்கொள்ளலாம்.

திரு. எம். அண்ணாதாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய பதிலுக்கு நன்றி. இந்தத் தொழிற்கூடங்களிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் வேலையில்லாத காரணத்தால் மிகவும் கஷ்டமான நிலையிலே அவதிப் பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். தமிழ்நாடு அரசு, தொழிலாளர் நலச் சட்டத்திற்கு பல திருத்தச் சட்டங்களைக் கொண்டு வந்து, தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று கருதி சட்டத்தை உருவாக்கியிருக்கிறது. அந்த அடிப் படையில் அவர்களுக்கு உரிமையும், பாதுகாப்பும் வேண்டும் என்று கேட்டால், எங்களுக்கு தொழிலே கிட்டவில்லை என்ற நிலையிருக்கும்போது, நாங்கள் எப்படித் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க முடியும் என்ற பதிலை அங்கே இருக்கின்ற அந்த 135 தொழிற் கூடங்களைச் சேர்ந்த நிர்வாகிகள் கூறு கிறார்கள். ஆக இதை மனதில் கொண்டு அந்த தொழிலாளர் களுக்கு கிடைக்க வேண்டிய உரிமையும், பாதுகாப்பும் கிடைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலைப் பற்றி தொழிற்துறை பார்க்க வேண்டும். தொழிலாளர்களைப் பற்றி தொழிலாளர் நலத் துறை பார்க்க வேண்டும். எனவே சம்பந்தப்பட்ட தொழிலாளர் நலத் துறையிடம் அந்தக் கருத்தைச் சொல்லி அதற்கான நடவடிக்கை எடுக்கும்படி கேட்பது பொருத்தமாக இருக்கும்.

பக்கிங்காம் கால்வாயைச் சீரமைத்து படகு போக்குவரத்து ஏற்படுத்துதல்.

49—(*வினா எண் 13829) டாக்டர் அ. பொன்னுசாமி, திரு. யு. பி. மாதையன் மற்றும் திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பங்கிங்காம் கால்வாயைச் சீரமைத்து படகுப் போக்குவரத்து ஏற்படுத்த அரசு முன்வருமா?

1987 நவம்பர் 11]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்தை 7-வது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்கான செயற்குறிப்பு ஒன்று மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

டாக்டர் அ. பொன்னுசாமி: மாண்புமிகு பெருமைபெற்ற பேரவைத் தலைவர் அவர்களே, கடல் அலைகளே போக்குவரத்து சாலைக்கு வந்து விட்டனவோ என்ற அளவுக்குப் போக்குவரத்து நெரிசல்கள் எல்லாம் தற்போது இருந்து கொண்டிருக்கின்றன. துர்நாற்றமோ சொல்லமுடியாத அளவுக்கு இருந்து கொண்டிருக்கின்றது. இதன் காரணமாக தூய கடல் நீரை விட்டு இரு மருங்கிலும் சாலைகளை அமைத்து, பூங்காக்களை நிறுவி, அங்காடிகளை அமைத்து, போக்குவரத்து படகுகளையும். பறக்கும் படகுகளையும், உல்லாச படகுகளையும், படகு வீடுகளையும் விட அரசு பங்கிங்காம் கால்வாயைச் சீரமைத்து, லண்டன் மாநகரில் உள்ள தேம்ஸ் நதியை விட, சிங்கார ஸ்ரீநகரத்தில் உள்ள சீலத்தை விட சென்னையை சிங்கார சென்னையாக மாற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 நிமிடத்தில் பெரிய சொர்க்கலோகத்தையே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிறுவி விட்டார்கள். ஆனால் இங்கே சொல்லுவதைப் போல உடனடியாக செய்வதற்கான வாய்ப்பு, நிதி வசதி நம்மிடத்தில் இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. ஆனால் எவ்வளவு செய்தாலும், அரசு செய்கிற அந்த நல்ல காரியங்களுக்கு ஒத்துழைப்பு இன்மையின் காரணமாக பல்வேறு இடங்களில் அதைச் செய்து முடிக்க முடியாத நிலை ஏற்பட்டு விடுகிறது. குறிப்பாக இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் மத்திய அரசுக்கு ஒரு செயற்குறிப்பை அனுப்பியிருக்கிறோம். அதாவது ஜெர்மன் நாட்டினுடைய நிபுணர் ஒருவரை வைத்து ஆய்வு செய்து 1986-ம் ஆண்டு எண்ணூரிலிருந்து சிந்தாமணி லாக்கு பகுதி வரை சரக்கு போக்குவரத்து மட்டும் ஏற்படுத்துவதற்காக 200 லட்ச ரூபாயில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு அந்தத் திட்டம் மத்திய அரசுக்கு

இப்போது ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. அதே போல் எண்ணூரில் உள்ள தெற்கு லாக் என்ற பகுதியிலிருந்து யானைகவுனி என்ற பகுதி வரை 128 லட்ச ரூபாயில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அடையார் தெற்கு லாக்கிலிருந்து மாமல்லபுரம் வரை 502 லட்ச ரூபாயில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப் பப்பட்டிருக்கிறது. மத்திய அரசு எந்த அளவுக்கு இதை ஏற்றுக்கொண்டு நிதி உதவி செய்கிறார்களோ அந்த அளவுக்கு தான் இவற்றைச் செய்ய முடியும். இதிலே 2 பக்கமும் பாதை அமைக்கின்ற அளவுக்கு இட வசதி இருக்குமானால் அதையும் அமைப்பதற்கு—இப்போது சென்னையில் சிலயிடங்களில் அமைத்துக் கொண்டு இருக்கிறோம்—வேண்டிய ஏற்பாட்டை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் படகு போக்குவரத்து முழுமையாக எல்லா இடங்களிலும் ஏற்படுத்த முடியுமா என்பது சந்தேகத்திற்குரிய ஒன்று. நாம் நினைப்பது போல் கடல் நீரை அங்கே கொண்டு வந்து, படகுப் போக்கு வரத்து ஏற்படுத்துவதற்கு எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவாகும் என்ற காரணத்தால் அது சாத்தியமாக இருக்குமா என்பது இன்று ஒரு பெரிய சந்தேகமாக இருக்கிறது. இருந்தாலும் சீரமைப்பதற் கான முயற்சியை அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது.

குற்றாலம் கோவிலைச் சார்ந்த சித்திரசபை ஓவியங்கள் மழை நீரால் பாதிக்கப்படுதல்.

50—(*வினா எண் 6048) திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குற்றாலம் கோவிலைச் சார்ந்த சித்திரசபை ஓவியங்கள் மழை நீரால் பாதிக்கப்பட்டு சிதைந்து வருவது அரசின் கவனத் திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், சீர் செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே. (அ மற்றும் ஆ) குற்றாலம் அருள்மிகு குற்றாலநாத சுவாமி திருக்கோயிலைச் சார்ந்த சித்திரசபையின் மேற்கூரை